பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 14 வியாழக்கிழமை 29.12.2022 கதிர் 305

## சீனாவின் மத்தியஸ்தத்தால் இழுபறியில் ஐ.எம்.எப். உதவி




சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை நிதி உதவி பெறும் விவகாரம் இழுபறியில் 2

# முரண்பாடுகளைக் களைந்துவிட்டு மக்கள் நலனில் கவனம் செலுத்துக

## தீர்வுக்கான பயணத்தில் கைகோர்க்குமாறும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அரசு அறிவுரை

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறைசெலுத்த வேண்டும். அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்க வேண்டும். 2





## மார்ச் 10 இற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்!

### நிமல் புஞ்சிஹேவா அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2

## விக்கியின் யோசனைக்கு ரெலோ அமோக வரவேற்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் திரட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரனின் யோசனையை ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வரவேற்றுள்ளார். 2

## நாட்டைஎம்மிடம் ஒப்படையுங்கள்

### சஜித் வேண்டுகோள்



நாட்டை எங்களிடம் ஒப்படையுங்கள், நாங்கள் நாட்டைக் கட்டியெழுப்பித் தருகின்றோம்.

–இவ்வாறு 8

## யாழில் போதை ஊசியால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

### இதுவரை இளைஞர்கள் 15 பேர் சாவு



யாழ்ப்பாணத்தில் அளவுக்கதிகமான போதைப்பொருளை ஊசி மூலம் ஏற்றிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் யாழ்ப்பாணத்தில் திணைக்களம் 2

### அரசியல் தீர்வை வென்றெடுக்க

## தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள்க!

### அநுரவின் தோழர் தினேஷ் அறைகூவல்



ஆட்சியில் இருந்த எந்த அரசும் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கியே தீரும். எனவே, தமிழ் மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியின்பின்னால்அணிதிரள வேண்டும். 8

## ஈ.பி.டி.பியின் தோளில் ஏறி ஆடுவதற்கு விட முடியாது!

### மணியின் 'பட்ஜட்' தொடர்பில் டக்ளஸ் கருத்து



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பாதீட்டு விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமக்கு இல்லை. அதேசமயம் ஈ.பி.டி.பியின் தோளில் ஏறி 'ஹையா', 'ஹையா' என ஆட்டவும் விட முடியாது.

+– இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மாவீரர் தினம் மற்றும் 2

## 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஆறுகால்மடத்தில் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். 2

## யாழ். மக்களுக்குச் சீனாவின் உலர் உணவுப் பொதிகள்







(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

சீன மக்களால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. 8

## முரண்பாடுகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவசரப்பட்டு அரசியல் தீர்வைக் கொண்டுவர முயலவில்லை. தேசிய இனப்பிரச்சினையால் தமிழர்கள் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டே அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் அவர் இறங்கியுள்ளார். தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்த வேண்டும். அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்க வேண்டும். நல்லிணக்கம் தொடர்பான பல நிறுவனங்கள் எனது அமைச்சின் கீழ் உள்ளன. அந்த நிறுவனங்கள் தங்கள் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கின்றன – என்றார்.

## மார்ச் 10 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனு கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## 5 ஆயிரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வநாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் என்று உப பொலிஸ் பரிசோதகர் தெய்வநாயகம் மேனன் தெரிவித்தார்.

இதன்போது 5 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## யாழில் போதை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் அலுவலக உதவியாளரா கக் கடமையாற்றுபவர். கடந்த செவ்வாய்க்கிழமை காலை வேலைக்குச் சென்றுவிட்டு மதியம் வீட்டுக்கு வந்த இவர், உணவு கூட உட்கொள்ளாது வேறு சில இளைஞர்களுடன் சென்றுள்ளார். பின்னர் இவர் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். தனக்கு உடல் நிலைசரியில்லைஎன்றுதெரிவித்துவிட்டு அங்குள்ள மரக்குற்றி ஒன்றில் அமர்ந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாலை 5 மணியளவில் அவர் திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில், அங்குள்ளவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாலை 6 மணியளவில் அவரைச் சேர்ப்பித்தனர். ஆயினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இளைஞரும், அவருடன் சென்ற மூவரும் போதைப் பொருளை ஊசி மூலம் உடலில் செலுத்தியுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந் துள்ளது.

இளைஞருடன் சென்றவர்களில் மூவர் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிய பின்னர் எஞ்சியிருந்த போதைப்பொருள் அனைத்தையும் இளைஞருக்கு ஏற்றியுள்ளனர் என்றும் விசாரணையில் கூறப்படுகின்றது.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

இளைஞரின் உயிரிழப்புக்கு அதிகளவு போதைப்பொருள் உடலில் ஏற்றப்பட்டமையே காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இதுவரை போதை ஊசியால் சுமார் 15 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

## சீனாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. சீனாவின் மத்தியஸ்தமே அதற்குக் காரணம்.

–இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

'சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா –சீனாவின் நிலைப்பாடு என்ன?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த விடயத்தில் நாம் நடுவில் இறுகி நிற்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவி பெறும் விடயத்தில் சீனா மத்தியஸ்தம் செய்து உதவி வருகின்றது.

அது இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு செயற்படும் நாடுகள் அவை. இந்த இரண்டு நாடு களிடம் உதவியைப் பெற்றுக்கொண்டு தான் நாம் பயணிக்கின்றோம்.

சீனா மத்தியஸ்தம் வகிப்பதால் இந்தியா கொண்டுள்ள அதே நிலைப்பாட்டைப் போல் இன்னும் சில நாடுகளும் கொண்டுள்ளன. முக்கியமாக அமெரிக்கா. இதனால் இந்த விவகாரம் இழுபறியில் உள்ளது – என்றார்.

## விக்கியின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாகக் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாத சூழலில் அது இனப்பிரச்சினைக்கான தீர்வில் பாதக நிலைமையைத் தோற்றுவிக்கும் என்று கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் ஓரணியில் திரளலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதற்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார்.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இழுத்தடிக்கும் நிர்வாகம்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாகக் கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சித் தலைமை, வெறும் எடுப்புக்கு, ஆரவாரம் பண்ணி அப்படிச் செய்கின்றதா அல்லது உண்மையான ஈடுபாட்டுடன் விடயத்தை முன்னெடுக்க எண்ணி நகர்கின்றதா என்ற கேள்வி – சந்தேகம் – பல மட்டங்களிலும் எழாமல் இல்லை.

அதற்கு காரணங்கள் உண்டு.

அரசியல் முடிவுகள், தீர்மானங்கள் எடுப்பதற்கான விருப்பு அரசியல் தலைமைகளுக்கு இருந்தால் மட்டும் போதுமானதல்ல. அவற்றை நடைமுறைப்படுத்தும் திடசங்கற்பமும் பற்றுறுதியும் அத்தலைமைகளிடம் இருக்க வேண்டும். அது அவசியம்.

அப்படி இருந்தால் மட்டுமே எண்ணிய காரியத்தை – எட்டிய தீர்மானத்தை – நடைமுறைப்படுத்தி அமுலாக்கம் செய்ய முடியும்.

தீர்க்கமான அரசியல் தீர்மானங்களை எடுத்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் திராணி – முதுகெலும்பு – ரணிலின் தலைமைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ரணில் விக்ரமசிங்க பதவியேற்று ஐந்து மாதங்கள் ஆகிவிட்டன.

பதவியேற்ற கையோடு தற்காலிக அமைச்சரவை ஒன்றை அமைத்தார் அவர். விரைவில் ஒழுங்கு முறையான அமைச்சரவை வரும் என்றார்.

ஆனால் ஐந்து மாதங்கள் ஆகியும் ஒரு நேர் சீரான அமைச்சரவையை அவரால் நியமிக்க முடியவில்லை. அதற்காக இருக்கும் அமைச்சரவை ஒழுங்கு முறையாகத்தானே இருக்கின்றது என்று அர்த்தமும் அல்ல.

அமைச்சுகளை, அமைச்சர்களை, அவர்களுக்கு ஒதுக்கக்கூடிய துறைகளை மாற்றி அமைக்கும் தேவையும் விருப்பம் ரணிலின் தலைமைக்கு இருந்தாலும், அவற்றைச் செய்வதற்கான திராணியும் மனவுறுதியும் கூட அதற்கு இல்லை என்பதே இந்த விடயங்களை முன்னெடுக்க முடியாது தடுமாறி இழுத்தடிக்கும் அத்தலைமையின் போக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இப்போது சில அமைச்சுகளின் செயலாளர்களின் மாற்றங்களும், அரச அதிபர் பதவி நிலை மாற்றங்களும் வருகின்றன. அவை கூட, ஓய்வு பெற்று பதவி விலகுகின்ற செயலாளர்களின் இடங்களுக்குப் புதியவர்களை நியமித்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் எழுந்தவையே தவிர, அமைச்சுகளின் செயலாளர் ஒழுங்கமைக்கும் திட்டத்தில் எழுந்தவை அல்ல.

அதேபோன்றுதான் ஆளுநர்கள் நியமனமும் கூட. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது நியமித்த ஆளுநர்கள் அனைவரையும் சகித்துப் போவதை தவிர, அவர்களை மாற்றி அமைக்கும் அல்லது மாற்றி அமைப்பதால் எழக்கூடிய விளைவுகளை எதிர்கொள்ளும் திடசங்கற்பம் ரணில் தலைமையிடம் இல்லையோ என்ற சந்தேகம்தான் அந்தச் செயலின்மைக்கான காரணமாகத் தோற்றுகின்றது.

உள்ளூராட்சி தேர்தலை தடுப்பதற்கான விருப்பம் கூட ஜனாதிபதி ரணிலுக்கு இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்தி, அதனால் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் துணிச்சல் அவரிடம் இருப்பதாகத் தோன்றவில்லை

அதனால் முடிவுகளை எடுக்காமல், இழுத்தடிப்பது அவரின் ஜனாதிபதி தலைமைத்துவத்தின் பண்பியல்பாக நீடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# பொதுமக்களால் மீட்கப்பட்ட மீனவர்களை தமிழகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை!



படகு இயந்திரம் பழுதடைந்த நிலையில் தமிழகம் – நாகை மாவட்ட மீனவர்கள் 4 பேர் யாழ்.வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கடற்கரையில் தஞ்சமடைந்த நிலையில் பொதுமக்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன், மீனவர்களை மீளவும் தமிழகத்திற்கு அனுப்பநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மீனவர்களின் வலைகளை இலங்கை மீனவர்கள் அறுத்து எடுத்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் அதனை மீட்பதற்காக தமிழகம்– நாகை மீனவர்கள் இலங்கை மீனவர்களைப் பின்தொடர்ந்து வந்த நிலையில் படகு இயந்திரம் பழுதடைந்து வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கடற்கரையில் தஞ்சமடைந்துள்ளனர்.

நாகை மாவட்டம் கோடியக்கரை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி மயிலாடுதுறை மாவட்டம் பெருமாள் பேட்டை சேர்ந்த சரவணன், பாண்டியன் உள்ளிட்ட 4 மீனவர்கள் பைப்பர் படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர் எனவும், இந்நிலையில் புதன்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை மீனவர்கள் தங்கள் பகுதியில் மீன் பிடிக்க கூடாது என விரட்டி அடித்ததுடன் தமது வலைகளை அறுத்து எடுத்துச் சென்றனர் எனவும் தஞ்சமடைந்துள்ள மீனவர்கள் கூறுகின்றனர்.

பல லட்ச ரூபா மதிப்பிலான மீன்பிடி வலைகளை இலங்கை மீனவர்கள் எடுத்துச் சென்ற நிலையில் அந்த வலைகளை தேடி யாழ்ப்பாணம் கடற்கரை பகுதிக்கு வந்தபோதே தமது படகில் உள்ள இயந்திரம் பழுதடைந்து தாம் தஞ்சமடைந்ததாகவும் கூறியிருக்கின்றனர்.

தஞ்சமடைந்த மீனவர்களை மீட்ட வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி மக்கள் அவர்களுக்கு உணவு வழங்கியதுடன் வல்வெட்டிதுறை பொலிஸாருக்கும், இலங்கை கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதுடன் பாதுகாப்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் தஞ்சமடைந்த மீனவர்களை உடனடியாக தமிழகத்திற்கு திருப்பி அனுப்ப பொலிஸாருடன் இணைந்து யாழ்.இந்திய துணைத் தூதரகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

# புதிதாகப் பதவியேற்ற கடற்படை தளபதி விமானப்படைத் தளபதியைச் சந்தித்தார்





புதிதாக பதவியேற்ற இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை நேற்று (புதன்கிழமை) விமானப்படை தலைமையகத்தில் சந்தித்தார்.

வருகை தந்த புதிய கடற்படை தளபதியை கொழும்பு விமானப்படை கட்டளை அதிகாரி எயார் கோமாடோர் சுரேஷ் பெர்னாண்டோ தலைமையில் இல 43 வண்ணஅணிவகுப்புப் படைப்பிரிவின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலங்கை விமானப்படை தளபதியுடனான உத்தியோக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது தனது வாழ்த்துக்களை விமானப்படை தளபதி தெரிவித்தார். மேலும் ஒன்றிணைந்த கடல் சார் கண்காணிப்பு மற்றும் கூட்டுப்பயிற்சிகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் இந்த சந்திப்பை நினைவுகூறும் வகையில் இருவருக்கும் இடையிலான நினைவுசின்னம்கள் பரிமாறப்பட்டன.

# போலி தகவல்கள் ஊடாக வெளிநாடு செல்வதைத் தடுக்க விசேட திட்டம்!

போலியான தகவல்கள் ஊடாக வெளிநாட்டு வேலைக்கு செல்வதை தடுக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் ஆட்பதிவு திணைக்களத்துக்கும் இடையில் நேற்று (புதன்கிழமை) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் பல்வேறு காரணங்களை முன்வைத்து தனிப்பட்ட தகவல்களை மாற்றிக்கொள்வதாக எழுந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் அதனைத் தடுக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, சந்தேகத்திற்கிடமான நபர்களின் தகவல்களை உடனுக்குடன் சரிபார்ப்பதற்காக, ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பைப் பயன்படுத்த இந்த ஒப்பந்தம் உதவுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# சீனாவில் பாலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக மோதிய 400க்கும் மேற்பட்ட வாகனங்கள்!

## பலருக்கு காயம்; மீட்பு நடவடிக்கைகள் மும்முரம்







பீஜிங், டிச.29

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் ஜெங்ஜவ் நகரில் உள்ள பாலம் ஒன்றில் நேற்றுக் காலை பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஒன்றின் மேல் மற்றொன்று நிற்கும் வகையிலான விபத்து ஏற்பட்டு உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதில், கார்கள், லொறிகள் என 400 க்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதி கொண்டன என்று தெரிவிக்கப்படு கின்றது. குளிர்கால சூழலை முன்னிட்டு காலையில் தெளிவற்ற வானிலை காணப்பட்டு உள்ளது.

இதன் எதிரொலியாக இந்த சம்பவம் நடந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி தகவல் அறிந்து தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 11 தீயணைப்பு வாகனங்களும், 66 வீரர்களும் உடனடியாக விபத்து இடம்பெற்ற அந்த பாலத்திற்கு சென்றுள்ளனர்.

பலர் இந்த விபத்தில் காயமடைந்து உள்ளனர் என்றும் அவர்களில்பலர்தொடர்ந்துஅவர்களதுவாகனங்களுக்குள் சிக்கி கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கொரோனாத் தடுப்பூசியை கண்டு ஓட்டமெடுக்கும் சீன முதியவர்கள்!



பீஜிங், டிச.29

சீனாவில் 'ஸீரோ கொவிட்' கொள்கை என்ற பெயரில் விதிக் கப்பட்ட கொரோனாக் கட்டுப்பாடுகளை ஜின்பிங் அரசு விலக்கிக்கொண்டு விட்டதைத் தொடர்ந்து, அங்கு தொற்றுப் பரவல் தீவிரமாகி உள்ளது. பல நகரங்களிலும் வைத்தியசாலைகளிலும், கொரோனா நோயாளிகளால் நிரம்பி வருகின்றனர் என்றும், கொரோனா பலிகளும் அதிகரிப்பதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், சீனாவில் கொரோனா தொற்று பரவல் அதி கரிப்புக்கும், அதிகளவில்

முதியோர் பாதிப்புக்குள்ளாவதற்கும் கூறப்படுகிற காரணம், தடுப்பூசி செலுத்தாமைதான் என சொல்லப்படுகிறதுடன், அதற்கு தீர்வாக அங்கே தற்போது அதிகாரிகள் முதியோர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக வீடு, வீடாக செல்கிறார்கள். ஆனால் தடுப்பூசியா, வேண்டவே வேண்டாம் என்று முதியோர் ஓடுகிற நிலை உள்ளதாகக் கூறப்படுகின்றது.

தடுப்பூசி போடுவதால் ஏற்படுகின்ற கடும் காய்ச்சல், ரத்தக்கட்டிகள் மற்றும் பிற பக்கவிளைவுகளால்தான் தடுப்பூசியைக் கண்டு முதி யவர்கள் ஓடுவதற்க்கான காரணம் என்று கூறப்படுகின்றது. இதுபற்றி சீன முதியவரான 64 வயதான லி லியான்ங்கெ என்பவர் கூறியதாவது, கொரோனா தடுப்பூசியினால் ஏற்படுகிற பக்க விளைவுகள் குறித்து கேள்விப்படுகிற முதியோர்தான்

தடுப்பூசி போட்டுக்கொள்ள விரும்புவதில்லை. என் நண்பர் ஒருவருக்கு 55 வயதாகிறது. அவர் தடுப்பூசி போட்டவுடன் காய்ச்சல் வந்தது. ரத்தக்கட்டிகள் ஏற்பட்டன. இதன் காரணமாக எனது நண்பர் இன்னொரு டோஸ் தடுப்பூசி போட விரும்பவில்லை. வைரஸ் உரு மாறிக்கொண்டே இருக்கிறது. அப்படி இருக்கையில், நாம் போட்டுக்கொள்கிற தடுப்பூசிகள் எந்த அளவு பலன் அளிக்கும் என்பதை நாம் எப்படி தெரிந்துகொள்ள முடியும்? என்று அவர் கூறியுள்ளார்.

ஆனால் ஙங்காய் புடன் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரியை சேர்ந்த ஜியாங் ஷிபோ கூறுகையில், முதியோரின் குடும்பத்தினர், உறவினர்கள் அவர்களுக்கு தொற்று என்பது ஆபத்தானது, அதனால் மரணமும் நேரிடக்கூடும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# 2024 ஆம் ஆண்டு முதல் தைவானில் ஒருவருட கட்டாய இராணுவ சேவை



தைபே, டிச.29

சீனாவில் 1949 ஆம் ஆண்டில் நடந்த உள்நாட்டு போரின்போது சீனாவிடம் இருந்து பிரிந்து சென்ற தைவான்தனிநாடாகஉருவெடுத்தது. ஆனால் சீனாவோ தைவான் இப்போதும் தங்கள் நாட்டின் ஒரு பகுதியே எனக் கூறி வருகிறதுடன், தைவானை ஆக்கிரமிக்கபடைபலத்தைபயன்படுத்தவும் தயாராகி வருகிறது.


அந்த வகையில் சீன இராணுவம்அடிக்கடிதைவானை சுற்றி வளைத்து போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. எனவே சீனாவிடம் இருந்து அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை சமாளிக்க தனது இராணுவத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை தைவான் எடுத்து வருகிறது.

தைவானை பொறுத்த வரையில் அந்த நாட்டை சேர்ந்த ஆண்கள் 4 மாதங்களுக்கு இராணுவத்தில் கட்டாயமாக பணியாற்ற வேண்டும் என்கிற சட்டம் உள்ளதுடன், தற்போது இந்த கட்டாய இராணுவ சேவை ஓரண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த வகையில், ஒரு வருட கட்டாய இராணுவ சேவை 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் முதல் அமுலுக்கு வரும் எனவும், 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஆண்களுக்கு இது பொருந்தும் எனவும் தைவான் அதிபர் சாய் இங் வென் கூறியுள்ளார்.

அதே வேளையில் 2005 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்த ஆண்கள் தொடர்ந்து 4 மாதங்கள் இராணுவத்தில் பணியாற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலிபான்களின் ஆட்சிக்கு எதிராக பாதுகாப்புக் கவுன்ஸில் அறிக்கை



நியூயோர்க், டிச.29

பெண்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலவும், தொண்டு நிறுவனங்களில் பணியாற்று வதற்கும் கடந்த வாரம் தலிபான்கள் தடை விதி த்தனர். இதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இந்த நிலையில் தற்போது ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் பெண்கள் மீதான அடக்குமுறைக்காக தலிபான்களை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா.வுக்கான இந்திய தூதரும், டிசம்பர் மாதத்துக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைவருமான ருச்சிரா கம்போஜ், 15 நாடுகளின் கவுன்ஸில் சார்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்–

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பல்கலைக்கழங்களில் நுழைவதற்கும், தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுவதற்கும் தலிபான்கள் தடைவிதித்ததாக வெளியான செய்திகளால் கவுன்சில் உறுப்பினர் மிகுந்த அச்சம் மற்றும் கவலை அடைந்தனர் எனவும், இந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உடனடியாக மாற்றியமைக்க தலிபான்களை வலியுறுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை கடந்த ஓர் ஆண்டாக ஆட்சி செய்து வரும் தலிபான்கள் பெண்களின்

சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையிலான கட்டுப்பாடுகளை தொடர்ந்து விதித்து வருகின்றனர். கடுமையான ஆடைக் கட்டுப்பாடு, பூங்காக்கள் மற்றும் உடற்பயிற்சி கூடங்களுக்குசெல்லதடை, ஆண்கள்துணையின்றி பயணிக்க தடை எனப் பல கட்டுப்பாடுகள் மூலம் பெண்களின் உரிமை நசுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ராகுல் காந்தியின் ஒற்றுமை யாத்திரையால் பாரதிய ஜனதாக் கட்சி பெரும் கலக்கத்தில்

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறுகிறார்



புதுடெல்லி,டிச.29

ராகுல் காந்தி மேற்கொண்டு வருகிற இந்திய ஒற்றுமை யாத்திரை பொதுமக்களிடம் நல்லதொரு ஆதரவைப் பெற்று வருகிறது. அதுதான் பா.ஜ.க.வுக்கு கலக்கத்தை அளித்துள்ளது என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

காங்கிரஸ் கட்சி 1885 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி, மும்பையில் தொடங்கப்பட்டதாகும். இந்த கட்சி தொடங்கப்பட்டு 137 ஆண்டுகள் நிறைவு அடைந்துள்ளது. இதையொட்டி, காங்கிரஸ் கட்சி தனது 138 ஆவது நிறுவன தினத்தை நேற்று உற்சாகமாக கொண்டாடியது.

டெல்லியில் உள்ள அந்த கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடந்த விழாவில் கட்சி கொடியை தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஏற்றினார். இந்த விழாவில் கட்சியின் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, அம்பிகாசோனி, வேணுகோபால், பவன் பன்சால் மற்றும் வழிகாட்டும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பேசும்போது கார்கே கூறியதாவது:-

1885ம் ஆண்டு இதே நாளில் காங் கிரஸ் கட்சி மும்பையில் தொடங்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியைத் தொடங்கி 137 ஆண்டுகள் கடந்து விட்டன. நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆன நிலையில், காங்கிரஸின் முத்திரையைப் பார்க்கக்கூடிய பல மைல்கற்களை நாடு கொண்டிருக்கிறது.

இந்தியா வெற்றிகரமான, வலிமையான ஜனநாயகமாக மட்டும் உருவாகிவிடவில்லை. கடந்த சில பத்தாண்டு காலகட்டத்தில் அது பொருளாதாரம், அணுசக்தி, பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் வல்லரசாக மாறி உள்ளது. விவசாயம், கல்வி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், சேவைத்துறையில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகி உள்ளது. இது சுயமாய் நடந்து விடவில்லை. அது ஜனநாயகத்தின் மீதான காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கையினாலும், அனைவரையும் உள்ளடக்கி உடன் அழைத்துச்சென்றதாலும், அனைவருக்கும் சம உரிமைகளும், வாய்ப்புகளும் தருகிற அரசியல் சாசனத் தின் மீது வைத்துள்ள முழுமையான நம்பிக்கையினாலும் தான் இது நடந்துள்ளது.

இந்தியாவின் அஸ்திவாரங்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றன. வெறுப்புணர்வால் சமூகம் பிளவுபடுத்தப்படுகிறது.

மக்கள் விலைவாசி உயர்வினா லும், வேலையில்லா திண்டாட்டத்தினாலும் பாதிக் கப்பட்டுள்ளனர். ஆனால் மத்திய அரசு அதுபற்றி கவலைப்படவில்லை.

ராகுல் காந்தி மேற்கொண்டு வருகிற இந்திய ஒற்றுமை யாத்திரை பொதுமக்களிடம் நல்லதொரு ஆதரவைப் பெற்று வருகிறது. அதுதான் பா.ஜ.க.வுக்கு கலக்கத்தை அளித்துள்ளது.நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த யாத்திரையில் சேர வேண்டும் என்று அழைக்கிறேன். நாங்கள் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அளிக்கிறேன். - இவ்வாறு அவர் கூறினார். மும்பையில் நடந்த விழாவிலும் காங்கிரஸ் தலைவர் கார்கே கலந்து கொண்டார்.

### கார்கே, ராகுல் டுவிட்டர் பதிவு

காங்கிரஸ் நிறுவன தினத்தையொட்டி கார்கே டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், காங்கிரஸ் கட்சியை அனைவரையும் உள்ளடக்கியதாக்குவோம். இளைஞர்கள், பெண்கள், விளிம்பு நிலை பிரிவினர், அறிவு ஜீவிகள் என அனைவரையும் கட்சியில் தொடர்புபடுத்துவோம். அவர்களோடு சேர்ந்து விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், வெறுப்புணர்வுக்கு எதிராக போராடுவோம் என கூறி உள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் நிறுவன தினத்தையொட்டி ராகுல் காந்தி டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், எல்லாச் சூழ்நிலைகளிலும் சத்தியம், அகிம்சை, போராடும் குணம் ஆகியவற்றைப் பாதையாகக் கொண்டு, ஒவ்வொரு அடியையும் பொதுநலனை அடிப்படையாக கொண்டு எடுத்து வைக்கிற அமைப்பில் (காங்கிரஸில்) நானும் அங்கம் வகிக்கிறேன் என்பதற்காக பெருமைப்படுகிறேன் எனக் கூறி உள்ளார்.

# ராகுலின் பாதுகாப்பில் குறைபாடு இல்லையாம்



புதுடெல்லி,டிச.29

ராகுல் காந்தி பாதுகாப்பில் எந்த குறைபாடும் இல்லை என்று துணை இராணுவப்படை விளக்கம் அளித்துள் ளது. ராகுல் காந்தி பாரத் ஜோடோ யாத்திரை என்ற பெயரில் நாடு முழுவதும் நடை பயணம் மேற்கொண்டுள்ளார். தற்போது அவரது யாத்திரை டெல்லிக்கு வந்துள்ளது.

இதனிடையே, ராகுல் காந்தியின் பாத யாத்திரையில் பாதுகாப்பு குளறுபடிகள் ஏற்பட்டன என காங்கிரஸ் குற்றம் சாட்டியது. இதற்குப் பதிலளித்துள்ள துணை இராணுவப்படை, ராகுல் காந்தியின் பாதுகப்பில் எந்த குறைபாடும் இல்லை என்றும், ராகுல் காந்தி பல சந்தர்ப்பங்க்ளில் பாதுகாப்பு நெறிமுறைகளை மீறினார் எனவும், இது தொடர்பாக அவ்வப்போது ராகுல் காந்தி தரப்பிடம் தெரிவிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# எப்படிப்பட்ட மனைவி வேண்டும்? இரகசியத்தை உடைத்தார் ராகுல்

புதுடில்லி, டிச.29

“நான் திருமணம் செய்யும் பெண்ணுக்கு, இந்திரா, சோனியாவின் குணநலன்கள் சேர்ந்திருந்தால் நல்லது” என காங்கிரஸ் எம்.பி. ராகுல் கூறியுள்ளார்.

யுடியூப் சேனல் ஒன்றுக்கு ராகுல் பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் இந்திரா போன்ற குணநலன்களை கொண்ட பெண்ணை வாழ்க்கை துணையாக ஏற்பீர்களா? என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு ராகுல் கூறுகையில் –

எனக்கு எனது தாயாரை மிகவும் பிடிக்கும். என் பாட்டி இந்திராவையும் நான் இன்னொரு அன்னை என்றே கூறுவேன். நான் திருமணம் செய்யும் பெண்ணுக்கு எனுது அன்னையின், பாட்டியின் பண்புகள் சேர்ந்திருந்தால் நல்லது.

எனக்கு கார்களை விட பைக் ஓட்டுவதே பிடிக்கும். என்னிடம் சொந்தமாக கார் இல்லை. ஆனால் நான் எலெக்ட்ரிக் ஸ்கூட்டர், எலெக்ட்ரிக் பைக் ஓட்டியுள்ளேன். அவை சீன தயாரிப்பு. ஆனாலும் அவை நன்றாக இருந்தன. இந்தியாவின் பழைய லாம்ப்ரட்டா வாகனம் எனக்கு பிடிக்கும். இந்தியாவின் மின்னணு வாகனம் பற்றி நிறைய பேசுகிறார்கள். ஆனால், அதை செயல்படுத்த திட்டங்கள் இல்லை. என்னை ‘பப்பு’ என விமர்சிப்பது பற்றியெல்லாம் எனக்கு கவலையில்லை. என்னை எப்படி வேண்டுமானால் அழையுங்கள். என்னை அடித்தாலும் கூட நான் உங்களை வெறுக்க மாட்டேன். என்னை அப்படி அழைப்பவர்கள் உள்ளார்ந்த அச்சத்தாலேயே அப்படி அழைக்கிறார்கள். எனக்கு இன்னும் நிறைய பெயர்கள் கூட சூட்டலாம். நான் அப்போதும் சலனமற்று இருப்பேன். – இவ்வாறு அவர் கூறினார்.



# பிரதமர் மோடியின் தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம்



அகமதாபாத்,டிச.29

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் தாயார் ஹீராபென் மோடி உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாகவும் ஓரிரு நாளில் மருத்துவமனையில் இருந்து அவர் ’டிஸ்சார்ஜ்’ செய்யப்படுவார் என்றும் குஜராத் அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி (வயது 100). இவர் குஜராத் மாநிலம், காந்தி நகர் ரேசானில் பிருந்தாவன் சொசைட்டி பகுதியில் அமைந்துள்ள தனது இளைய மகன் பங்கஜ் மோடியின் இல்லத்தில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் அவரது உடல்நிலை திடீரென பாதிக்கப்பட்டது. இதையடுத்து நேற்று அவர் ஆமதாபாத்தில் உள்ள யு.என்.மேத்தா இதய நோய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.இது குறித்து தகவல் அறிந்ததும், பிரதமர் மோடி நேற்று மதியம் ஆமதாபாத்துக்கு விரைந்தார். விமான நிலையத்தில் இருந்து நேராக அவர் தாயார் சேர்க்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரிக்கு காரில் வந்தார்.அங்கு அவர் தாயாரைப் பார்த்தார். அங்கிருந்த டாக்டர்களிடம் தாயாரின் உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்படுகிற சிகிச்சை பற்றியும் விசாரித்து அறிந்தார்.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென்மோடி உடல் நிலையில் முன்னேற்றம் இருப்பதாகவும் ஓரிரு நாளில் ’டிஸ்சார்ஜ்’ செய்யப்படுவார் என்றும் குஜராத் மாநில அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 13 இல் இணைப்பு இல்லை; அதற்கு இடம் கொடோம்!



## மு.கா. தவிசாளர் அப்துல் மஜீட் திட்டவட்டம்

(எம்.எம்.அஸ்லம்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை உள்ளடக்கவில்லை என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல்.அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரப் பகிர்வில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் உரிமைகளை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தவிசாளர் அப்துல் மஜீட் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987.07.29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது, அதற்கமைய 13 ஆவது திருத்தச் சட்டம் 1987.11.14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரம் 1988 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு உட்பட மூன்று கட்டங்களாக மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது.

மாகாண சபைகள் சட்டத்தின் பிரகாரம் வடக்கும் கிழக்கும் ஒரு வருடத்திற்கு மாத்திரமே இணைந்திருக்கும் எனவும் அதன் பின்னர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு அதன் மூலமே இணைப்பை நீடிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி இரண்டு மாகாண சபைகள் ஒன்றுபட்டுசெயற்பட வேண்டும் என்று இரண்டுசபைகளும் தீர்மானிக்கும் பட்சத்தில் இணைந்து செயற்பட முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2006ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் படி வடக்கும் கிழக்கும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டு, 2008ஆம் ஆண்டும் 2012ஆம் ஆண்டும் மாகான சபை தேர்தல் நடாத்தப்பட்டது என்பது நாடறிந்த வரலாறாகும். 13 ஆவது அரசியல் திருத்த சட்டத்தில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற சரத்து உள்ளடக்கப்பட்டிருப்பின் அதை மீட்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு கிடையாது என்பது அரசியல் மாணவர்களுக்குஆ புரியும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றுவாய் என்பது அதிகாரப் பகிர்வுடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றது. கட்சியின் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களுடைய காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட அரசியல் அபிலாசைகளும் கோட்பாடுகளையும் இன்றைய எமது தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னெடுத்துச் செல்வதில் எந்தக் கட்டத்திலும் பின்வாங்கவில்லை. ஆட்சி அதிகாரப்பகிர்வில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மறுதலிக்கப்படாத உரிமைகளை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை.

இந்நிலையில் பருவமுற்றாத அரசியல் சிறு குழந்தைகள் அங்குமிங்கும் பீற்றித்திரிவதை நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

அரசியல் சந்தர்ப்பவாதிகளும் பதவியாசை பிடித்தவர்களும் கட்சியையும், கட்சியின் தலைமைத்துவத்தையும் பிழையாக சித்திரித்துக் காட்ட முற்படுகின்றனர். முஸ்லிம் காங்கிரஸின் உண்மையான போராளிகள் கட்சியின் மீதும் தலைமைத்துவத்தின் மீதும் எப்போதும் விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களாகவே இருந்து வருகின்றனர் - என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தம்பலகாமத்தில் பாழடைந்து காணப்படுகின்ற அரச கட்டடம்



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதியில் அமையப் பெற்றுள்ள அரச கட்டடம் பல வருடங்களாகப் பாழடைந்து, காடு மண்டி, கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் எட்டு வருடங்களுக்கும் மேலாக மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் விடுதிக் கட்டடமே இவ்வாறு காடு மண்டி பாழடைந்து காணப்படுகிறது. இதனால் அருகாமையில்உள்ளகுடியிருப்பாளர்கள் டெங்கு நோய்த் தாக்கத்துக்கும் உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த அரச கட்டட வளாகத்தினுள் பற்றைக் காடு காணப்படுவதுடன் நுளம்புப் பெருக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

தற்போதுள்ள நிலையில் பல அரச திணைக்களங்களில் கட்டடங்கள் குறைபாடாகக் காணப்படும் நிலையில் இவ்வாறான கட்டடத்தை முறையாகப் பயன்படுத்துவதன் ஊடாக அந்நெருக்கடியைத் தவிர்க்கலாம். இக் கட்டட பகுதி கால் நடைகளின் மேய்ச்சல் தளமாக மாறி யுள்ளது. மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கின்றது. எனவே இக்கட்டடத்தை பாவனைக்கு உகந்த வகையில் பயன்படுத்துமாறு உரிய அதிகாரிக ளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முதலையிடம் சிக்கிய இளைஞன் 3 நாள்களின் பின் சடலமாக மீட்பு

## மட்டு. கரடியனாறில் சம்பவம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

முதலை தாக்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆவெட்டியாவெளிவண்ணாத்திஆற்றைநபரொருவர் கடக்கும்போது முதலையிடம் சிக்கி காணாமல் போயிருந்தார். இவ்வாறு முதலையிடம் சிக்கிய நபரின் உடல் கடற்படையினரின் உதவி யுடன் மூன்று நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

முதலை தாக்குதலில் மரணமடைந்த நபர் தம்பானம்வெளியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய சதாசிவம் சஸ்பாபு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்துக்கு சென்ற மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

# கல்முனை ஆசிரியர்களுக்கு நேற்று ஒரு நாள் செயலமர்வு





(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா நிறுவன அனுசரணையுடன் கல்முனை கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதானம் மற்றும் விழுமிய கல்வி, தொடர்பாக மாணவர்களுக்கு மத்தியில் அடுத்த ஆண்டில் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கில் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நேற்று சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய மண்டபத்தில் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம். அப்துல் மலீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விக் பிரதம அதிதியாகவும், வளவாளராகவும் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கலந்து கொண்டு ஆசிரியர்களைப் பயிற்றுவித்தார். இப்பயிற்சிப் பட்டறையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம்.அஸ்லம் சஜா, பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கினார். கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலிவ், உதவிக் கல்விப்பணிப்பாளர் அஸ்மா மலீக் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பயிற்சியின் இறுதியில் ஆசிரியர்கள் 2023ம் ஆண்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடைமுறைப் படுத்தக்கூடிய விடயங்கள் பற்றி கலந்துரையாடி தமது திட்டங்களை முன்மொழிந்தமை இப்பயிற்சியின் சிறப்பம்சமாகும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மொழிபெயர்ப்பு தினமும் இதழ் வெளியீடும்







2017 ஆம் ஆண்டில் ஐ.நா. சபை உலக நாடுகளை இணைக்கவும் நாட்டின் அமைதி மற்றும் சமாதானத்தைப் பேணுவதற்கு உதவிபுரிபவர்களாக வும் விளங்கும் மொழிபெயர்ப்பாளர்களை கொண்டாடும் விதமாக செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியை சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியது.

இந்த வருடம் 'தடைகளற்ற உலகம்' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 2011ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்றிலிருந்துதொடர்ந்து10வருடங்களாககொண்டாடப்பட்டு வரும் இந்தத் தினம், இந்த வருடமும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையால் டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகரும் கௌரவ விருந்தினர்களாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆணையாளரான பிரசாத் ஹேரத் மற்றும் தேசிய மொழி சமத்துவ பிரதி ஆணையாளரான திருநாவுக்கரசு மாரிமுத்து ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களின் முயற்சிகளையும் வெகுவாக பாராட்டினர்.

இந்தத் தினத்தில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்பை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான கண்காட்சியும் மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டதுடன் பி.ப 2 மணி தொடக்கம் வருடாந்த இதழ் வெளியீடும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்ச்சியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆக்கங்களுக்கு பணப்பரிசில்களும் ஆவண மற்றும் கவிதை மொழிபெயர்ப்பின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையின் பட்டதாரிகள் மூவரால் மூன்று புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

# கிளிநொச்சியில் இளம் பெண் ஒருவர் ஓட்டோவில் கடத்தல்!

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உதய நகர் பகுதியில் வசித்து வரும் 22 வயது பெண் ஒருவரை ஆறு பேர் கொண்ட கும்பல் நேற்று (புதன்கிழமை) மாலை ஓட்டோவில் கடத்திச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

உதயநகர் பகுதியில் வசிக்கும் மேற்படி பெண் ஆண் ஒருவரை காதலித்து வந்தார் எனவும் அந்தக் காதலன் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிந்த நிலையில் அவரை திருமணம் செய்ய மறுத்து வந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த காதலன் போதை தலைக்கேறிய நிலையில் ஆறு பேர் கொண்ட கும்பலுடன் பெண்ணின் வீட்டுக்குள் புகுந்து தாய் மற்றும் தம்பியை தாக்கிவிட்டு பெண்ணை ஓட்டோவில் இழுத்துச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரியில் வீட்டை உடைத்து திருட முயன்ற ஒருவர் மடக்கி பிடிப்பு



யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் வீட்டை உடைத்து திருட முயற்சித்த திருடனை அயலவர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் ஆள்களற்ற நேரம், வீட்டின் கதவை நேற்று (புதன்கிழமை) உடைத்து திருட முயற்சித்தவேளை சத்தம் கேட்டு அயலவர்கள் கூடி திருடனை மடக்கி பிடித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்து மடக்கி பிடிக்கப்பட்ட சந்தேக நபரை பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சீன மக்களின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட உலருணவு பொதிகள் மன்னாரில் வழங்கல்!






சீன மக்களிடம் இருந்து சீன அரசின் ஊடாக இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொதிகள் நேற்று (புதன்கிழமை) மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அமுலாக்கத்தில் இந்த உலர் உணவு பொதிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பொறுப்பாளர், பிரதித் தூதுவர் ஹூவெய், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மற்றும் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லுவோ சோங், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளர் வென்சாங், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் ஜே.கெனடி, இராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து இந்த உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து வறிய, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் விசேட தேவைக்கு உள்ளான 1380 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் கட்டமாக 300 பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஈ.பி.டிபியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலீபனின் நினைவேந்தல் போன்றவற்றை மணிவண்ணன் தரப்பு மேற்கொண்டதாலா மாநகர சபையின் பாதீட்டுக்கு ஆதரவளிக்கவில்லை எனக் கேள்வி எழுப்பிய போது, அவ்வாறு கூற முடியாது. இது கட்சியின் கொள்கை. அவர்கள் வேண்டுமானால் தங்கள் சுயலாபத்துக்கு அவ்வாறு கூற முடியும் – என்றார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அபிவிருத்தி, அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்து பயணித்துவரும் கட்சியாகும்.

அந்தவகையில் யாழ். மாநகர சபையின் பாதீட்டை வைத்து அரசியல் செய்ய வேண்டிய நோக்கம் எமக்குக் கிடையாது. ஆனால், எமது கட்சியின் ஆதரவில்லாமல் பாதீட்டை நிறைவேற்றவும் முடியாது.

கடந்த வாரம் யாழ். மாநகர சபையின் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டபோது நாம் அதில் பங்குகொள்ளவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. மாநகர மேயர் தெரிவில் எமது கட்சி ஆதரவை வழங்கிய நிலையில்

சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்களில் எமது கட்சி புறக்கணிக்கப்படுகின்றது.

மாநகர சபையில் ஆதிக்கமுள்ள எமது கட்சி மீது தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில் தொடர்ந்தும் ஈ.பி.டி.பியின் தோளில் ஏறி ஆடுவதற்கு விட முடியாது.

ஆகவே, யாழ். மாநகர சபையின் திருத்திய வரவு – செலவு திட்டத்தை ஆதரிப்பது தொடர்பில் பரிசீலிப்போம். என்னிடம் சம்பந்தப்பட்டவர்கள் ஆதரவைக் கோர இதுவரை பேசவில்லை. கட்சி அங்கத்தவர்களுடன் பேசினார்களோ தெரியவில்லை – என்றார்.

## தேசிய மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு அநுரகுமாரதிஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் – கொழும்பு மாவட்டத்துக்கான நிர்வாகக் குழு உறுப்பினரும் ’கோட்டா கோஹோம்’போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவருமான தினேஷ் குமார் கார்மேகம் தெரிவித்தார்.

மக்களை அணிதிரட்டி ராஜபக்சக்களை ஆட்சிப்பீடத்திலிருந்து விரட்டியடித்தது தேசிய மக்கள் சக்திதான் என்பதை எவரும் மறக்கமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ராஜபக்சக்கள் கொடூரர்கள். ரணிலும் சஜித்தும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இந்த நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய ஒரேயொரு அணி தேசிய மக்கள் சக்திதான். இதை உணர்ந்துதான் உலக நாடுகளின் தூதுவர்களும், பெரும்பான்மை இன மக்களும் தேசிய மக்கள் சக்தியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில், தமிழ் மக்களும் தேசிய ரீதியில் சிந்தித்து தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்.

கடந்த போர்க்காலத்தில் காணாமல் போனோருக்கு நீதி கிடைக்க வேண்டும், தமிழ் மக்களுக்கு அரச வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது.

தலைநகரத்தின் – கொழும்பு வாழ் தமிழ் மக்களின் குரலாக நான் என்றும் ஒலித்துக் கொண்டிருப்பேன். நாட்டை விற்று மீண்டும் மீண்டும் அழித்துக் கொண்டிருக்கும் கயவர்களுக்குப் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் தோள் கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்குக் கொழும்பு மாநகரத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும். வடக்கு – கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளைத் தவிர மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் மீதோ அல்லது கொழும்பு வாழ் தமிழ் அரசியல்வாதிகள் மீதோ இனிமேலும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதில் எந்தவிதப் பயனும் இல்லை. ஏனெனில், இவர்கள்தான் 74 வருடங்களாக ஆட்சியில் இருந்த திருட்டுக் கும்பலை வளர்த்துவிட்டவர்கள் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




## யாழ்.மக்களுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹூவெய், சீனத்துதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் ஆகியோர் கலந்துகொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

யாழ். மாவட்டத்தில் 1,320 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் முதல் கட்டமாக இன்று யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், யாழ். மாவட்ட மேலதிக அரச (காணி) அதிபர் முரளிதரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் கே.பாலகிருஷ்ணன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

## நாட்டை எம்மிடம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

‘பிரபஞ்சம்’ வேலைத்திட்டத்தின் கீழ் 52 ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்று பிலியந்தல தர்மராஜ மகா வித்தியாலயத்துக்கு நேற்று எதிர்க்கட்சித் தலைவரால்அன்பளிப்புச்செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பிரபஞ்சம் வேலைத்திட்டம் என்பது நம் நாட்டுக்குப் பழக்கப்பட்ட ஒரு திட்டமல்ல. மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு பல்வேறு விடயங்களைச் செய்யப் பழகியதே தவிர, அதிகாரம் இல்லாத போது மக்களுக்காக சேவை செய்ய நம் நாடு பழக்கப்படவில்லை. இது சம்பிரதாயக் கட்டமைப்புக்கு அப்பாற்பட்ட வேலைத்திட்டம். முறைமை மாற்றத்தை கோருபவர்களுக்கு இது மிகவும் வெற்றிகரமான முறைமை மாற்றமாகும்.

இந்நாட்டில் சுகாதாரத்துறைக்கு, கல்வித் துறைக்கு இது போன்ற பணியை வேறு எந்த எதிர்க்கட்சியும் செய்யவில்லை. நாட்டை வங்குரோத்தாக்கி நாட்டுக்கு எந்தவொரு பணியையும் ஆளும் கட்சி செய்வதாக இல்லை.

ஏதேனும் ஒரு தருவாயில், தற்போதைய எதிர்க்கட்சியிடம் மக்கள் நாட்டின் பொறுப்பை ஒப்படைத்தால், மூச்சு, பிரபஞ்சம் வேலைத்திட்டங்கள் போன்று எமது நாட்டின் நிதிப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வைப்போம். இல்லை முடியாது பார்ப்போம் போன்ற வார்த்தைகள் என்னிடம் இல்லை. எந்தவொரு சவால் விடுக்கப்பட்டாலும் உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தி மீண்டும் வலுவான, வளமான நாட்டை உருவாக்குவோம்.

அரசியல் மேடைகளில் தம்பட்டம் அடிக்கும், மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகளுக்கு இந்த பஸ்களை வழங்கும் திட்டம் நகைச்சுவையாக இருக்கும். 2022 ஆம் ஆண்டில், சில பாடசாலைகளில் பல்வேறு பயணங்களுக்கான போக்குவரத்துக் கட்டணமாக கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபா வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலவசமாக பஸ் கொடுப்பதன் மூலம் இவ்வளவு பெரிய தொகை வசூலிப்பது குறையும்.

இளைஞர்களைப் பகடைக்காயைப் போல் பயன்படுத்தும் தரப்பால் இன்னும் நாட்டுக்குச் சேவை ஆற்றப்படவில்லை. அத்தரப்பினர் தங்கள் கட்சி அலுவலகங்களை மிகவும் ஆடம்பரமாக நிர்மாணித்துள்ளனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் வாடகை வீட்டில்தான் இயங்கி வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் கட்சி நிதியை தன் விருப்பப்படி செலவிடுவதில்லை. அத்தகைய நிதி பிரபஞ்சம், மூச்சு போன்ற மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களுக்கு மட்டுமே செலவிடப்படும். நாம் எவ்வளவு பணத்தைக் கொண்டிருந்தாலும் சரி, படித்தவர்களாக இருந்தாலும் சரி, ஒழுக்கம் மிக்க சமுதாயத்தை உருவாக்குவது நமது கடமையாகும் – என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2022 இல் வெளியிடப்பெற்றது.